ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1956/16 - 2016 මාර්තු මස 01 වැනි අඟහරුවාදා - 2016.03.01

*1956/16 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பு - திருத்த இலக்கம் 01**

2015, ஓகத்து மாதம் 21 ஆம் திகதிய 1928/28 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பு கீழே காட்டப்பட்டுள்ளவாறு திருத்தப்படுவதற்கு அரச சேவைகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளதாக அறியத்தருகின்றேன்.

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரச சேவைகள் ஆணைக்குழு.

7.2.1.1 (அ) பந்தி கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

அ. பொதுவான பதவியணிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் பட்டம் பெற்றிருத்தல்.

7.2.1.1 (ஆ) பந்தி கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

ஆ. விசேட பதவியணிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் முறைமை பாடத்திற்காக)

தகவல் தொழில்நுட்ப விடயத்திற்காக மற்றும் தொழில்நுட்பவியல் விடயங்களின் கீழ் உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடத்திற்காக உரிய பாடப்பரப்புக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் பட்டம் பெற்றிருத்தல்.

7.2.1.1 (இ) பந்தி கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

இ. விசேட பதவியணிக்கான ஆட்சேர்ப்பு (இயந்திரவியல் தொழில்நுட்பம்)

இயந்திர, நிர்மாணித்தல், மின் மற்றும் இலத்திரனியல் துறைகளில் ஒன்றுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொண்ட பொறியியல் பட்டம் அல்லது இலங்கை உயர்தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமாவை பெற்றிருத்தல் (NDES) பெற்றிருத்தல்.

*7.3.2.1* (அ) (i) பந்தி கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) பொதுவான பதவியணி
கல்வித் தகைமைகள்

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் அல்லது தேசிய கல்வி நிறுவனத்தினூடாகப் பெறப்பட்ட பட்டத்துடன் கூடிய ஆசிரியராகவிருத்தல்.

*7.3.2.1* (ஆ) (i) பந்தி கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

(ஆ) விசேட பதவியணி

கல்வித் தகைமைகள்

(i) குறித்த பாடத்திற்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் அல்லது தேசிய கல்வி நிறுவனத்தினூடாக பெறப்பட்ட பட்டத்துடன் கூடிய ஆசிரியராகவிருத்தல்.

அட்டவணை “ஆ” இல் இலக்கம் 15 தொழில்நுட்பவியல் (உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில் நுட்பம்) எனும் வரி கீழ்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது.

| பாடம் | ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் |
|---|---|
| 15. தொழில்நுட்பவியல்<br>(i) உயிரியல் தொழில்நுட்பம் | விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டம் அல்லது மனையியல், நெசவுக் கைத்தொழில் தொழில்நுட்பம், மொழித்திறன் தொடர்பான ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா பெற்றிருத்தல் |
| (ii) பொறியியல் தொழில்நுட்பம் | தொழில்நுட்பவியல் விடயப்பரப்பின் கீழ் பொறியியல் தொழில்நுட்ப விடயப் பாடப்பரப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட தொழில்நுட்பவியல் பட்டம் அல்லது இயந்திரவியல் கட்டுமானம், மின்சாரம் மற்றும் இலத்திரனியல் போன்ற துறைகளில் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் பட்டம் அல்லது இலங்கை உயர்தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது மொறட்டுவ பல்கலைக்கழகம் வழங்குகின்ற மூன்று ஆண்டுகளைக் கொண்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) அல்லது கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமாவை (NDES) பெற்றிருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா (DT) அல்லது இலங்கை மூன்றாம்நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப தகைமை மட்டம் 6 க்குரிய உயர் டிப்ளோமா (NVQ Level 6) பெற்றிருத்தல். |

*3- 426*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.